வானவில்

VAANAVIL
ISSUE - 62 FEBRUARY 2016

இதழ் - 62 மாசி 2016

# ஒற்றையாட்சியும் சமஸ்டியும் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் அல்ல!

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான 'தடல்புடல்' ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதற்கு முன்னரும் 1972இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசின் குடியரசு அரசியல் யாப்பு ஏற்பட்ட போதும், 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நிறைவேற்று ஜனாதிபதி முறை கொண்ட அரசியல் யாப்பு ஏற்பட்ட போதும் இத்தகைய ஆரவாரங்கள் இருக்கத்தான் செய்தன.

1972, 1978 அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்ட போது, அந்த அரசியல் யாப்புகள் இலங்கையின் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டை சுபீட்சப்பாதையில் கொண்டு செல்லப்போவதாகத்தான் அதை வகுத்தவர்கள் கூறினர். ஆனால் நடைமுறையில் நடந்தது வேறு. 1972 அரசியல் யாப்பில் பல முற்போக்கான அம்சங்கள் இருந்தாலும், இனப் பிரச்சினையை அது கூர்மைப்படுத்தியது. 1978 அரசியல் யாப்பில் முன்னர் இருந்த அரைகுறை ஜனநாயக அம்சங்களும் இல்லாதொழிக்கப்பட்டதுடன், இனப் பிரச்சினையையும் யுத்தமாக மாற்றியது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தற்போது வரையப்படவுள்ள அரசியல் யாப்பு எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருக்கப் போகிறது, அது நடைமுறைக்கு வந்தால் என்னென்ன விளைவுகளை உருவாக்கும் என்ற கேள்விகள் எழுவது இயல்பானது.

இலங்கையில் மற்றைய எல்லா முரண்பாடுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இனப் பிரச்சினைதான் முன்னுக்கு வந்து நிற்கிறது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அதனால்தான் இடதுசாரிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பியினர் 1971இலும் 1988 – 89 காலகட்டத்திலும் முன்னெடுத்த 'வர்க்கரீதியிலான' ஆயுதப் போராட்டம் குறுகிய காலத்தில் ஒடுக்கப்பட்டுவிட, தமிழீழம் என்ற தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம் நீண்டகாலம் நிலைத்து நின்றதுடன், தனியான ஆட்சிப் பிரதேசத்தையும் நீண்டகாலம் வைத்திருந்தது.

ஆனாலும், தனிநாட்டுத் தீர்வு என்பது அரசியல் ரீதியாகவும், நடைமுறைரீதியாகவும் தமிழ் மக்களுக்கு பொருத்தப்பாடு இல்லாத ஒன்று என்றபடியால், அந்தப் போராட்டமும் இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது. ஆனால் தனிநாட்டுத் தீர்வு தமிழ் மக்களுக்குப் பொருத்தப்பாடு இல்லாவிட்டாலும், அவர்களுக்கு தேசிய இனப் பிரச்சினை ஒன்று உள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அதனால்தான், புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் நேரங்களிலெல்லாம், அதில் இனப் பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படுவது ஒரு வழமையாக இருந்து வருகிறது. தற்போது இன்னொரு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட இருக்கிறது என்றதும் தமிழ் மக்களுக்கு மீண்டும் அப்படியான ஒரு எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இதுவரை காலமும், இன்றும் நிலவும் யதார்த்தம்தான் என்ன?




தென்னிலங்கையைப் பொறுத்தவரை, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. போன்ற பிரதான கட்சிகள் உட்பட, இடதுசாரிக் கட்சிகளைத் தவிர ஏனைய அத்தனை கட்சிகளும் இலங்கை இறுக்கமான ஒற்றையாட்சி கொண்ட ஒரு நாடாக இருக்க வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. இன்று ஆட்சியில் இருக்கும் மைத்திரி — ரணில் அரசு தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சொன்னாலும் கூட, அந்தத் தீர்வு ஒற்றையாட்சிக்குள் உட்பட்டதாகவே இருக்கும் என்பதையும் வலியுறுத்துகிறார்கள்.

மறுபக்கத்தில், தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் மூத்த தமிழ் கட்சியான தமிழ் காங்கிரஸ் ஐம்பதுக்கு ஐம்பதையும், பின்னர் தமிழரசுக் கட்சி சமஸ்டிக் கொள்கையையும்,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# குட்டக்குட்ட குனிய முடியாது

**க**டந்த ஒரு வருட காலத்தில், 65 வருட பழைமை வாய்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலதுசாரிகளின் பிடியில் முற்று முழுதாக விழுந்து உட்கட்சி ஜனநாயகத்தையும் குழி தோண்டிப் புதைத்து விட்டதால், கட்சியில் உடைவு என்பது தவிர்க்க முடியாதாகிவிட்டது. ஸ்ரீல.சு.கட்சி இரண்டாக பிளவுபடுவதைத் தடுப்பதற்காகவும், கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் கட்சிக்குள் ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காகவுமே, கட்சித்தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் கையளிப்பதாக கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். மைத்திரிபால சிறிசேனா ஸ்ரீல.சு.கவின் பொதுச்செயலாளராக இருந்து கொண்டே, குள்ளத்தனமாக, ஸ்ரீல.சு.கவின் முன்னாள் தலைவர் சந்திரிகா குமாரதுங்காவின் ஏற்பாட்டில், ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக, ஸ்ரீல.சு.கவின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்சவிற்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றியீட்டியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீல.சு.கவின் தலைமை சிறிசேனாவிடம் கைமாறிய பின்னர், அவர் சந்திரிக்காவுடனும் ஐ.தே.கவுடனும் சேர்ந்து கொண்டு கட்சிக்குள் மஹிந்தாவின் செல்வாக்கினை குறைப்பதென்ற போர்வையில், கட்சியினை தனது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வருவதிலேயே காய்களை நகர்த்தி வருகிறார். கட்சியின் ஒழுக்கவிதிகளை மீறுவதாகக்கூறி, கட்சியின் போக்கினை துணிந்து பகிரங்கமாக விமர்சிக்கும் உறுப்பினர்கள் (இவர்கள் சிறிசேனா – சந்திரிகாவின் பார்வையில் மஹிந்தாவின் ஆட்கள்) கட்சியை விட்டு கலைக்கப்படுகின்றனர். இதைவிட விசேட பொலிஸ் பிரிவொன்றினை அமைத்து ஸ்ரீல.சு.கவினரும் மஹிந்த குடும்பத்தினரும் திடீர் திடீரென வேட்டையாடப்பட்டு வருகின்றனர். மஹிந்தாவின் ஆட்சிக்காலத்தில் பாரிய ஊழல்கள் நிகழ்ந்ததாக, 'நல்லாட்சி' செய்யப் போவதாகக்கூறி பதவிக்கு வந்தவர்கள் தமது அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதிலேயே முழுக்கவனமும் செலுத்தி வருகிறார்கள். சரியான முறையில் ஊழல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு, இதுவரையில் எவருமே நீதித்துறையின் முன்னே நிறுத்தப்படவில்லை. சிறிசேனாவிடம் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிப்பதவி இருப்பதினால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஸ்ரீல.சு.கவின் அதிருப்தியாளர்கள் உள்ளனர்.

தென்னிலங்கை (பெரும்பான்மையினத்து) மக்களின் செல்வாக்குப் பெற்ற தலைவராக விளங்கும் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் ஒன்று இம்மாதம் 12ந் திகதி பத்தரமுல்லையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு நான்கு தினங்களுக்கு முன்னதாக, கூட்டு எதிர்க்கட்சி மற்றும் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஸ்ரீல.சு.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஆரம்பிக்கவுள்ளதாக என்று பரவலாக கூறப்படும் புதிய கட்சி தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று மஹிந்த தலைமையில் மிரிஹானவில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றதாக அறியப்படுகின்றது. அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்த 57 இலட்சம் மக்களைக் காட்டிக்கொடுக்க மாட்டேன், ஸ்ரீல.சு.கவிலிருந்து ஒருபோதுமே விலகப்போவதில்லை என்றே மஹிந்த திரும்பத்திரும்ப கூறிவந்திருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் இம்மாதம் 14ந் திகதி நீர்கொழும்பில் 1500 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட ஒன்றுகூடலில், மஹிந்த தனது உரையில், "உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கான கூட்டத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்களில் 95 சதவீதத்தினர் வருகை தந்துள்ளனர். இவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை என்று கூறி, இவர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றினால், இவர்கள் செல்வதற்கு ஓர் இடம் வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

எவருடைய வழிகாட்டுதல்களும் திட்டமிடல்களும் இன்றி தவிக்கும் ஸ்ரீல.சு.கவின் ஆதரவாளர்களை ஒழுங்கான முறையில் ஒருங்கமைத்து அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது இன்று உடனடியான அவசியம். 1951இல் ஏகாதிபத்திய விசுவாசக்கட்சி ஐ.தே.விலிருந்து பிரிந்து ஸ்ரீல.சு.கட்சி தோற்றம் பெற என்னென்ன காரணங்கள் இருந்தனவோ, அதே காரணங்கள் இன்றும் உருவாகியுள்ளன. தேசிய அளவில் புதிய கட்சி ஒன்று உடனடியாக முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி மையத்திற்கு நெருங்கக் கூடியளவிற்கு சாத்தியப்பாடுகள் உள்ளனவா என்ற ஐயப்பாடுகள் எழுந்தாலும், இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ளவர்களை தூக்கியெறிந்து, நாட்டினை காப்பாற்ற இதைத்தவிர வேறுவழியில்லை.

---

## வானவில்


**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com


இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

## இலங்கை வாசகர்களுக்கு

**'வானவில்'** இதழை இணையத்தளம், மின்னஞ்சல் என்பனவற்றின் மூலம் வாசிக்கும் இலங்கை வாசகர்கள், வானவில்லின் அச்சுப் பிரதியை (Print Copy) மாதம் தோறும் கட்டணம் எதுவுமின்றி தபாலில் பெற்று வாசிக்க விரும்பினால், மேலேயுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் பெயர் மற்றும் முகவரியைப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

# நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கெய்ம் புலிகளைப் பற்றி என்ன சொல்ல வருகிறார்?



இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கெய்மின் (Erik Solheim) நடவடிக்கைகளை பார்க்கும்போது, மனிதருக்கு இலங்கை பற்றி இலங்கையருக்கே இல்லாதளவு அக்கறை வந்துவிட்டதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஏனெனில், கொஞ்ச நாட்களுக்கு முன்னர் ஒரு வைபவத்தில் அவர் உரையாற்றுகையில், 'தமிழர்களின் உரிமைகளைச் சிங்களவர்கள் தாங்களாகவே ஒருபோதும் தர மாட்டார்கள்' எனக் கூறியதாக ஒரு செய்தி வெளியானது. அதாவது 'பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர்களின் உரிமைகளை சிங்களவர்கள் தரமாட்டார்கள், போராடித்தான் பெற வேண்டும்' எனவும் இதை அர்த்தப்படுத்தலாம்.

தற்போது புலிகளால் கொலை செய்யப்பட்ட இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், புலிகளுக்கெதிரான போரில் வேறெவரையும் விடக் கூடுதலான இராஜதந்திர வெற்றியை இலங்கைக்கு சர்வதேச அரங்கில் ஈட்டித் தந்தவருமான லக்ஸ்மன் கதிர்காமர் மீது அவதூறான குற்றச்சாட்டொன்றை சொல்கெய்ம் முன்வைத்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' 2016 ஜனவரி 14ஆம் திகதி நாளிதழில் பின்வருமாறு அவர் கூறியதாக இவ்வாறு ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது:

"ஐரோப்பிய ஒன்றியத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டமை சமாதானத்தை ஏற்படுத்த தடையாக இருந்தது. இந்த நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் தடை விதிப்பதில் முக்கிய பங்காற்றியிருந்த இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் இந்த நடவடிக்கை தவறானது என்றே நான் கருதுகிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அரசியல் தலைவர்களும் இராஜதந்திரிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டமொன்றை காண வழியேற்பட்டிருக்கும்".

## சுப்பராஜன்

சொல்கெய்மின் கருத்தை ஆராயப் புறப்படுவதற்கு முன்னர் ஒரு கருத்தைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். அதாவது, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா உட்படப் பல நாடுகள் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்திருந்த நேரத்தில், எரிக் சொல்கெய்மின் நோர்வே மட்டும் அவ்வாறு (இன்றுவரை) தடை செய்யவில்லை. சொல்கெய்மின் தற்போதைய கூற்றைப் பார்க்கும் போது, நோர்வே அப்படித் தடை செய்யாமல் விட்டதற்கு இவர்தான் காரணகர்த்தாவாக இருந்திருப்பாரோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

சொல்கெய்மின் கருத்துப்படி கனடாவைத் தவிர மற்றைய நாடுகள் புலிகளைத் தடை செய்வதற்கு லக்ஸ்மன் கதிர்காமர் முக்கிய பங்கு ஆற்றியிருந்தார் என்பது உண்மையே. கனடா புலிகளைத் தடை செய்த நேரத்தில் லக்ஸ்மன் கதிர்காமரைப் புலிகள் தீர்த்துக் கட்டியிருந்தனர். புலிகளையும், கனடாவில் இயங்கிய உலகத் தமிழர் அமைப்பையும் கனடிய அரசாங்கம் தடை செய்ததிற்கு அந்த இரு அமைப்புகளும் கனடாவில் செயற்பட்ட முறைதான் முக்கிய காரணம் என்ற போதிலும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரை புலிகள் படுகொலை செய்ததையும் இந்தத் தடையின் போது கனடிய அரசாங்கம் கவனத்தில் எடுத்திருக்கும் என நம்பலாம்.

புலிகளைப் பல நாடுகள் தடை செய்த பின்னரும், அந்தத் தடை செய்யப்பட்ட நாடுகளிலேயே புலிகள் அடாவடித்தனங்களிலும், கட்டாய பண வசூலிப்பிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவர்களை இந்த நாடுகள் தடை செய்யாமல் விட்டிருந்தால் என்னென்ன 'கூத்துகள்' ஆடியிருப்பார்கள் என்பதை ஒருவர் எண்ணிப் பாத்தாரென்றால், சொல்கெய்மின் கருத்தின் விபரீதத்தைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட சொல்கெய்மிக்கு மட்டும் இந்த உண்மை தெரியாமல் போனது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

அதாவது, இலங்கையை பாசிசவாதப் புலிகளிடமிருந்து மீட்பதற்காக இலங்கையின் தேசபக்த சக்திகள் நடாத்திய போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய லக்ஸ்மன் கதிர்காமரை சொல்கெய்ம் குறை கூறுவது என்பது, அவரை மட்டும் அவமதிக்கும் செயல் மட்டுமல்ல, முழு இலங்கையர்களையே அவமதிப்பதாகும். ஆனால், அவர் சொல்வது போல கதிர்காமரின் நடவடிக்கைகளால் புலிகள் கோபம் அடைந்தார்கள் என்பதும், அதனால் அவரைக் கொலை செய்தார்கள் என்பதும் உண்மைதான்.

ஆனால் அவர் மீது அவர்கள் ஏன் கோபம் கொண்டார்கள்? சொல்கெய்ம் சொல்வது போல சமாதான முயற்சிகளுக்கு அவர் இடையூறாக இருந்தார் என்பதற்காகவா? இல்லவே இல்லை. தமது காட்டுமிராண்டித்தனமான யுத்தத்திற்கும், பாசிச நடவடிக்கைகளுக்கும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து தாராளமாகப் பணமும், ஏனைய உதவிகளும் பெறுவதற்கு கதிர்காமர் தடையாக இருக்கிறார் என்றே அவர்

மீது புலிகள் சினம் கொண்டனர். இதுதான் உண்மை. ஆனால் சொல்கெய்மோ பிரபாகரனை ஒரு சமாதான விரும்பியாகக் காட்ட முனைகிறார்! கதிர்காமர் புலிகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காவிட்டால், பிரபாகரன் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வந்திருப்பார் என்ற கருத்துப்படச் சொல்கிறார்!!

ஆனால் உண்மை என்ன?

இந்திய முயற்சியால் இலங்கையின் நான்கு போராளிக் குழுக்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டு, திம்புவில் அந்த நான்கு இயக்கங்களும் இலங்கை அரசுடன் பேசுவதற்கும் இந்தியா ஏற்பாடு செய்தது. ஆனால் புலிகள் என்ன செய்தார்கள்? ஐக்கியத்தை விரும்பிய மற்றைய மூன்று இயக்கங்களையும், அதன் தலைவர்கள் போராளிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொலை செய்தார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கு தன்னால் முடியுமான அளவில் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக, அப்போதைய அமெரிக்க சார்பு வலதுசாரி ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை அடிபணிய வைத்து, இந்திய – இலங்கை உடன்படிக்கையை ஏற்படுத்திய இந்திய அரசின் சமாதானப் படையை எதிர்த்துப் புலிகள் நம்பிக்கைத் துரோகப் போர் செய்ததுடன், அந்நாட்டின் தலைவர் ராஜீவ் காந்தியையும் மனித வெடிகுண்டு மூலம் படுகொலை செய்தனர். ஒருவேளை ராஜீவின் தயார் இந்திரகாந்தி, சீக்கியப் பயங்கரவாதிகளால் முன்னரே கொலை செய்யப்படாமல் இருந்திருந்தால், அவரையும் புலிகளே தீர்த்துக்கட்டியிருப்பார்கள்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்ததற்காக, 'வளர்த்த கடா மார்பில் பாய்வது போல' தம்மை வளர்த்துவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோரையும், எண்ணற்ற இதர தமிழ் தலைவர்களையும் கூட புலிகள் தீர்த்துக் கட்டினர். 'தந்தை செல்வா' என தமிழர்களால் அழைக்கப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அன்றைய காலகட்டத்தில் உயிருடன் இருந்திருந்தால், அவரையும் பிரபாகரன் தீர்த்துக் கட்டியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

பின்னர் சந்திரிக குமாரதுங்க ஜனாதிபதியானதும், ஜே.ஆர்., பிரேமதாச போன்ற ஐ.தே.க. தலைவர்கள் போல அல்லாது, உண்மையாகவே அவர் புலிகளுக்கு சமாதானக் கரம் நீட்டினார். ஆனால் அவரது இதயசுத்தியான இந்தச் சமாதான முயற்சியைக் கண்டு மிரண்ட புலிகள், அவரையும் மனித வெடிகுண்டு மூலம் கொல்ல முயன்று முடியாமல் போய், அவரது ஒரு கண்ணை நிரந்தரமாகவே பறித்தெடுத்தனர்.

பின்னர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியானதும் அவரையும் கொலை செய்வதற்குப் பல தடவைகள் முயன்றார்கள். ஆனால் இறுதியில் அவரது கையாலேயே பிரபாகரனும் அவரது சகாக்களும் இறுதி முடிவைத் தழுவிக் கொண்டனர்.

அதுமட்டுமல்ல. இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சாதாரண அமைச்சராக இருந்த நேரத்திலேயே, அவரையும் கொலை செய்ய புலிகள் முயன்றிருக்கிறார்கள். அதற்குப் பயன்படுத்தப்பட்டு, பின்னர் கைதுசெய்யப்பட்டு 10 ஆண்டுகள் சிறையில் இருந்த ஒருவரை, ஜனாதிபதி மைத்திரி அண்மையில் மன்னித்து விடுதலை செய்ததை சொல்கெய்ம் நிச்சயமாக அறியாமல் இருக்கமாட்டார். அன்று மைத்திரி புலிகளால் கொலை செய்யப்பட்டிருந்தால், மகிந்தவை வீழ்த்துவதற்கு நோர்வே உட்பட்ட மேற்கத்தைய சக்திகள் வேறொருவரைத்தான் தேட வேண்டியிருந்திருக்கும்.

இவ்வாறெல்லாம் செயற்பட்ட பாசிசப் புலிகளும், அவர்களது தலைவர் பிரபாகரனும், லக்ஸ்மன் கதிர்காமரின் செயலால் கோபமடைந்துதான் சமாதான முயற்சிகளில் பங்குபற்றாமல் போனார்கள் என சொல்கெய்ம் சொல்வது, முழுப் பூசனிக்காயை ஒரு கவளம் சோற்றில் மறைக்கும் பிரயத்தனமே தவிர வேறல்ல.

இன்னும் சொல்லப்போனால், சொல்கெய்ம்மின் நல்ல நண்பரும், புலிகளின் அரசியல் ஆலோசகரும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகளின் அணிக்குத் தலைமைதாங்கியவருமான அன்ரன் பாலசிங்கம், தனது சமாதான முயற்சிகளை பிரபாகரன் விரும்பவில்லை என பலரிடம் அங்கலாய்த்தது போல, சொல்கெய்ம்மிடமும் அங்கலாய்க்காமல் விட்டிருப்பார் எனத் தோன்றவில்லை.

புலிகளின் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட, அந்த இயக்கத்தில் அன்றைய காலகட்டத்தில் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருந்த 'கருணா அம்மான்' கூட, சமாதானத் தீர்வு எதனையும் எட்டாமல் பார்த்துக் கொள்ளும்படி பிரபாகரன் தன்னிடம் கூறியதாக, அன்ரன் பாலசிங்கம் தனக்குத் தெரிவித்ததாகப் பகிரங்கமாகவே கூறியிருக்கிறார்.

இவ்வளவு விடயங்கள் இருக்கக்கூடியதாக, சொல்கெய்ம் பிரபாகரனையும், அவரது சகாக்களையும் சமாதானப் பிரியர்களாகக் காட்ட முனைவது, சொல்கெய்ம்முக்கு இலங்கை சம்பந்தமாக இன்னமும் நிகழ்ச்சி ஏதாவது இருக்கிறதோ என்ற ஐயத்தைத்தான் தோற்றுவிக்கிறது.

# யாரை யார் விளக்கம் கோருவது?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சார்ந்தவர்கள் பலரை ஒழுக்காற்று நடவடிக்கை எனக் கூறி அந்த கட்சியிலிருந்து வெளியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

"தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செயற்பட்டு, எமது கட்சி வேட்பாளரைத் தோற்கடித்த யாரோ இப்போது எம்மிடம் விளக்கங்கள் கோருகின்றனர். கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் தற்போதைய செயலாளரும் கட்சியிலிருந்து வெளியேறி ஐ.தே.கடன் சேர்ந்து எமது கட்சியை தோற்கடித்தார்கள். ஐ.தே.கவுடன் செயற்பட்டவர்களையே விளக்கங்கள் கோரி அழைக்க வேண்டும், எங்களையல்ல" என வலாலவித்த பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உடேனி அதுகொரல கூறியுள்ளார். *

# யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஓர் ஒளிக்கீற்று!

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தற்போதைய மைத்திரி – ரணில் அரசு மருத்துவக் கல்வியை தனியார்துறைக்கு தாரை வார்க்கும் முயற்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகச் செய்திகள் வந்தன. அதைப் பார்த்தபோது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் மத்தியில் ஒரு புதிய உற்சாகம் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் அது ஆரம்பிக்கப்பட்ட பொழுது இருந்த மாணவ தலைமுறையினர் வகித்த முற்போக்கான நிலைப்பாட்டை, பின்னைய கால மாணவர்கள் வகித்திருக்கவில்லை. அதற்காக அவர்களைக் குறை சொல்லியும் பயன் இல்லை.

1977இற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அமெரிக்கா சார்பான ஜே.ஆர்.ஜெவர்த்தனவின் வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சி அரசு நாடு முழுவதும், ஜனநாயக உரிமைகளை நசுக்கி, தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினையையும் யுத்தமாக மாற்றியதால், ஐ.தே.க. அரசுக்கு எதிரான வடக்கும் தெற்கும் இணைந்த ஐக்கியப்பட்ட போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அப்போராட்டத்தில் வடக்கைப் பொறுத்தவரை யாழ்.பல்கலைக்கழகம் ஒரு பிரதான களமாக இருந்தது. அதன் காரணமாக பிற்காலத்தில் அங்கிருந்து பல அறிவுஜீவிகளும், போராட்டத் தலைவர்களும் உருவானார்கள்.

பின்னர் அரசும் புலிகளும் திட்டமிட்டு இனங்களுக்கிடையில் இனவாத அடிப்படையில் பிளவுகளை உருவாக்கியதால், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட தமிழ் மக்கள் தேசிய ரீதியிலான போராட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டனர். அதன் பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட அத்தனை போராட்டங்களும் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் இனவாத அடிப்படையிலேயே நடைபெற்று வந்தன.

யாழ்.பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்டு 'காணாமல்' போக வைக்கப்பட்ட போதும், மருத்துவத்துறை பேராசிரியை ராஜினி திராணகம புலிகளால் பட்டப்பகலில் வீதியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட போதும், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் இறங்கி சில போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும், பின்னர் புலிகளால் அப்படியான போராட்டங்கள் மிரட்டி நிறுத்தப்பட்டன. புலிகளைத் தவிர மாற்றுக் கருத்துள்ள எவரும் யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் நுழையவே முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இந்த நிலைமையை பெரும்பாலான யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பாவிட்டாலும் வேறுவழியின்றி வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டிய சூழ்நிலையே நிலவியது.

***கிருஸ்ணா***

அதுமட்டுமின்றி, யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் முற்போக்கு சிந்தனையாளரான அதன் முதலாவது தலைவர் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தலைமையில் முற்போக்கு சிந்தனையும், ஆழமான அறிவாற்றலும், அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு ஆசிரியர் குழாம் கற்பித்தலில் ஈடுபட்டது. அத்துடன் பல்கலைக்கழகக் கல்வித் திட்டத்துக்கு அப்பால் மாணவர்கள் சுதந்திரமாக பல கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடாத்தவும், வெளியிலுள்ள மக்கள் பிரச்சினைகளில் பங்கெடுக்கவும் வாய்ப்புக்கள் இருந்தன. அதன் காரணமாக மாணவர்களின் அறிவுத்திறன் விசாலமடைந்ததுடன், மக்கள் தொடர்புள்ளவர்களாகவும் அவர்கள் வளர்ந்தனர். ஆனால் பிற்காலத்தில் தமிழ் தேசியவாதத்தால் வளர்க்கப்பட்ட விரிவிரையாளர்களின்



ஆதிக்கம் வந்ததின் காரணமாக, யாழ்.பல்கலைக்கழகம் ஒரு குட்டிப் பாடசாலையின் தரத்துக்குத் தாழ்ந்துபோனது.

புலிகளின் ஆதிக்கம் காரணமாக மாணவர்கள் கடிவாளம் பூட்டிய குதிரை மாதிரி செயல்பட்டதுடன், புலிகள் 'சொல்வதைச் செய்யும் சுப்பன்களாக' மாற்றப்பட்டனர். அவர்களது சுதந்திரமான சிந்தனைக்கும் செயல்களுக்கும் கடுமையான தடை விதிக்கப்பட்டது. 2009இல் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே இந்நிலைமை படிப்படியாக மாற்றமடையத் தொடங்கியது.

ஆனாலும் 2015 ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இலங்கையில் மேற்கத்தைய சார்பு வலதுசாரி அரசாங்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர், தமிழ் மாணவர்கள் மட்டுமின்றி நாட்டின் அனைத்து இன மாணவர்களும் புதிய விதமான பாதிப்புகளுக்கு உள்ளாக ஆரம்பித்துள்ளனர். ஆனால் அது அவர்களுக்கு மட்டும் உரித்தானது அல்ல. முழுநாட்டு மக்களுக்கும் உரித்தானது.

தற்போதைய அரசாங்கம் ஏகாதிபத்திய சக்திகளின் உத்தரவுகளுக்கு அடிபணிந்து நாட்டை நவகாலனியாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அதனால் முழுநாடும் இருள்மயமான ஒரு

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க…**

# அடுத்த தமிழகத் தேர்தலில்
# மக்கள் நலக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்குமா?



தமிழகத்தில் நான்கு கட்சிகள் சேர்ந்து உருவாக்கியுள்ள 'மக்கள் நலக் கூட்டணி' தமிழகத்தில் அடுத்த ஆட்சியை அமைக்கும் என அக்கூட்டணியின் தலைவர்கள் சூளுரைத்து வருகின்றனர். அவர்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஆசைப்படுவது ஒருபுறமிருக்க, அடுத்த தமிழக சட்டசபைத் தேர்தலில் குறைந்தபட்சம் அக்கூட்டணி 50 தொகுதிகளிலாவது வெற்றி பெற்றுத் தேறி வருவார்களா என்பதே தற்போது தமிழக அரசியலை நன்கு அறிந்தவர்கள் கேட்கும் கேள்வியாகும்.

ஏனெனில், 1967இல் முதல் தடவையாக காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்து, திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க). திரு.சி.என்.அண்ணாத்துரை தலைமையில் ஆட்சியைப் பிடித்த பின்னர், அக்கட்சியோ அல்லது அதிலிருந்து சினிமா நடிகர் திரு. எம்.ஜீ.இராமச்சந்திரன் உருவாக்கிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ (அ.இ.அ.தி.மு.க)தான் கடந்த 49 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சிப் பொறுப்பில் இருந்து வருகின்றன.

இந்த நிலைமையில் அரை நூற்றாண்டாக தமிழகத்தைப் பீடித்த 'திராவிடம்' என்ற பிழைப்புவாத நோயை ஆறு மாதங்களுக்கு முன்னர் உருவாக்கிய மக்கள் நலக் கூட்டணி எடுத்த எடுப்பில் விரட்டிவிடும் என எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானது.

அதுமாத்திரமன்று. மக்கள் நலக் கூட்டணியில் உள்ள கட்சிகளே கடந்த காலத்தில் கொள்கைரீதியாக எதிரும் புதிருமாக இருந்தவை. அதில் உள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் (ம.தி.மு.க) தலைவர் வை.கோபாலசாமியும் திராவிடக் குட்டையிலிருந்து வந்தவர்தான். அதுமாத்திரமின்றி, இலங்கைத் தமிழர்களுக்கு 'தனிஈழம்'தான் தீர்வு என வலியுறுத்துவதுடன், புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் தெய்வமாக வழிபடுபவர். (வைகோ கட்சி தொடங்குவதற்கு பிரபாகரன்தான் பணம் கொடுத்தவர் என்ற ஒரு கதையும் உண்டு)

இன்னொரு கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவனும் புலிகளின் மாபெரும் பக்தர். அதனால்தான் தனது கட்சியின் பெயரில் புலியின் பெயரையே வைத்திருக்கிறார். அவர் நேரடியாகத் திராவிடம் பேசாவிட்டாலும், திராவிடக் கட்சிகள் பேசும் தமிழ் தேசியத்தையே தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தாழ்த்தப்பட்ட மக்களை விடக் கூடுதலாக நேசிப்பவர்.

## பிரகாஸ்ராஜ்

மறுபக்கத்தில், கூட்டணியில் உள்ள மற்றைய இருகட்சிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பன முற்கூறிய இரு கட்சிகளினதும் தமிழ் தேசியம், புலிகள் பற்றி மாறுபாடான கொள்கைகளைக் கொண்டவை. குறிப்பாக மார்க்சிஸ்ட் கட்சி, ஒன்றுபட்ட இந்தியாவுக்குள்ளும், ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளும் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற கொள்கையை உடைய கட்சி.

இப்படியாக சில முக்கியமான விடயங்களில் எதிரும் புதிருமான இந்த நான்கு கட்சிகளும், தமிழக மக்கள் எதிர்நோக்கும் சில அடிப்படைப் பிரச்சினைகளை வைத்தே தமது கூட்டணியை உருவாக்கி இருக்கிறார்கள். அதாவது, பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசு மற்றும் அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு என்பவை பின்பற்றும் வெளிநாட்டு — உள்நாட்டு பெரும் கொம்பனிகளுக்கு சார்பான பொருளாதாரக் கொள்கைகள், இந்துத்துவா சார்பான கொள்கைகள், அடக்குமுறை கொள்கைகள், தீண்டாமை கொடுமை, ஊழல் - மோசடி — வீண் விரயம், போன்றவற்றுக்கு எதிராகப் போராடுவதே தமது கொள்கை என மக்கள் நலக் கூட்டணி அறிவித்துள்ளது.

தமிழகத்தின் தற்போதைய அதிமுக ஆட்சி மட்டுமின்றி, முன்னர் ஆட்சி செய்த தி.மு.கவும் அதே கொள்கைகளைப் பின்பற்றியதால், அக்கட்சியையும் தாம் எதிர்ப்பதாகவும் மக்கள் நலக் கூட்டணி அறிவித்துள்ளது. அதாவது மாறிமாறி ஆட்சி செய்த இரு கழகங்களுடனும் இனிமேல் கூட்டணி இல்லை என்பதால்தான், தாம் புதிய கூட்டணியை அமைத்துள்ளதாக அதன் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இந்தக் கூட்டணியில் உள்ள நான்கு கட்சிகளும் கடந்த 49 வருடங்களாக இரு திராவிடக் கழகங்களுடனும் கூட்டுச் சேர்ந்தே தேர்தல்களில் போட்டியிட்டு சில ஆசனங்களைப் பெற்று வந்துள்ளன. அப்படியானால் இரு கழகங்களினதும் மக்கள் விரோதக் கொள்கைகள் இவ்வளவு காலமும் இந்தக் கட்சிகளுக்குத் தெரிய வராமல் இப்பொழுதுதான் திடீரெனத் தெரிய வந்ததா என்ற ஒரு நியாயமான

கேள்வி எழுகின்றது. அதற்கு அவர்கள் பதில் என்ன? அதுமட்டுமின்றி, இனிமேலும் இரு கழகங்களுடனும் கூட்டுச் சேரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? ஏனெனில், எதிரும் புதிருமான நான்கு கட்சிகள் ஒன்று சேர்வதற்கு ஏதோ சில காரணங்களைச் சொன்னவர்கள், நாளை 'தேர்தல் உத்தி' என்று சொல்லிக் கொண்டும், 'அரசியல் இராஜதந்திரம்' என்று சொல்லிக் கொண்டும், இரு கழகங்களில் ஏதாவது ஒன்றுடன் கூட்டுச் சேரமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு.

உண்மையில் தமிழகத்தைப் பொறுத்தவரை, முடை நாற்றமெடுக்கும் இரண்டு கழகங்களுக்கு எதிராகவும் ஒரு மாற்று இன்று மக்களுக்குத் தேவைப்படுகிறது. அந்த வகையில் சில கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும் மக்கள் நலக் கூட்டணியை வரவேற்கலாம். அதன் காரணமாகவே எதிர்பார்த்ததையும் விட மக்கள் நலக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஓரளவு ஆதரவும் அதிகரித்திருக்கிறது. மதுரையில் அக்கூட்டணி நடாத்திய அரசியல் எழுச்சி மாநாட்டில் இது தெரிய வந்திருக்கிறது.

ஆனால், இந்தக் கூட்டணியை நம்பிக்கையுடன் பார்க்கும் மக்களின் எதிர்பார்ப்பை காப்பாற்றுவதிலேயே அதன் எதிர்காலம் தங்கி இருக்கிறது. அப்படிப் பாதுகாப்பதானால், அக்கூட்ணி முன்வைத்த கொள்கைகளில் உறுதியாக இருப்பதுடன், கூட்டணியையும் சிதறவிடாமல் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்தால், நடைபெறப்போகும் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற முடியாவிட்டாலும், வருங்கால வெற்றிக்கு ஒரு உறுதியான அத்திவாரம் இடலாம். அப்படி இல்லாமல் வழமைபோல திராவிடக் கட்சிகளை அண்டி நின்று சில ஆசனங்களைப் பெற முயன்றால் எதிர்காலம் பூஜ்யமாகத்தான் அமையும்.

தேர்தல் வெற்றிக்கு கொள்கை மட்டுமின்றி சில தந்திரோபாயங்களும் தேவை. ஏனெனில் தேர்தல் உத்திகளிலும், மோசடிகளிலும், அராஜகத்திலும் பெயர்போன இரு திராவிடக் கழகங்களினதும் பிடியிலிருந்து தமிழகத்தை விடுவிப்பதானால், சில தந்திரோபாயங்களைக் கையாளாமல் முடியாது. அதில் முக்கியமானது, சில விட்டுக் கொடுப்புகளைச் செய்தாவது இரு கழகங்களுக்கும் எதிரான அனைத்து சக்திகளையும் ஓரணியில் திரட்டுவதாகும். அப்படிப் பார்த்தால் தற்போதைய மக்கள் நலக் கூட்டணிக்குள் விஜயகாந் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகம், வாசன் தலைமையிலான தமிழக காங்கிரஸ், இராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய காங்கிரஸ் கட்சி என்பனவும் இந்தக் கூட்டணியில் ஒன்று திரட்டப்பட வேண்டும்.

இந்த எல்லாக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டுவது பெரும் பிரயத்தனம் என்றாலும், இத்தகைய ஒரு மகா கூட்டணி இல்லாவிட்டால் அதிமுக, திமுக என்ற இரு திராவிடப் பிசாசுகளையும் விரட்டியடிப்பது சாத்தியமாகாது.

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

எதிர்காலத்தை எதிர்நோக்கி நிற்கிறது. தற்போதைய ஆட்சியாளர்கள் முன்னைய ஆட்சியாளர்களிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாத்துள்ளதாகவும், நாட்டு மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதாகவும் எவ்வளவுதான் அழகிய வார்த்தைகளைப் பேசினாலும், நாடு வெளிநாட்டு சக்திகளுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே பட்டவர்த்தனமான உண்மையாகும். இன்னும் இரண்டொரு வருடங்களில் அதன் உண்மை தெரிய வரும்.

அதனால்தான் இப்பொழுது தென்னிலங்கையில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் தினம் தினம் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளனர். அந்தப் போராட்டங்களில் ஒன்றுதான், இந்த அரசு மருத்துவக் கல்வியை தனியாருக்குத் தாரைவார்ப்பதற்கு எதிரான போராட்டம். நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்த தேசிய ரீதியான பிரச்சினையில் நாட்டின் ஏனைய பகுதி மாணவர்களுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் கைகோர்த்திருப்பது ஒரு நல்ல சகுனமாகும். ஆனால் வழமைபோல தமிழ் இனவாத சக்திகள் தமிழ் தேசிய வெறியைக் கிளறி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை இந்த மாதிரியான போராட்டங்களிலிருந்து பிரிக்க எத்தனிப்பர். அவர்களது சதியில் அகப்படாது தம்மைப் பாதுகாத்துக் கொள்வது மாணவர்களின் செயல்பாட்டில்தான் தங்கியிருக்கிறது. *

# இது ரணில் விக்கிரமசிங்க ரக நல்லாட்சி!

தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக செய்த பல பிரச்சாரங்களில் ஒன்று முன்னைய அரசாங்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்ப அங்கத்தினர்களும், நெருங்கிய உறவினர்களும் முக்கிய அரச பதவிகளுக்கு நியமிக்கட்டிருந்தனர் என்பதாகும். அந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மையும் இருந்தது என்பதை நடுநிலைமையுடன் சிந்திக்கும் எவரும் ஏற்றுக் கொள்வர். அதில் எவருக்கும் பிரச்சினை இல்லை.

இந்தக் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மீது சுமத்திய தற்போதைய அரச தலைவர்கள், தாம் ஆட்சிக்கு வந்தால் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து நல்லாட்சியை வழங்குவோம் எனவும் சூளுரைத்திருந்தனர். இது அரசியல்வாதிகளின் வழமையான வாய்ச்சவடால் என்றாலும், அப்பாவிப் பொதுமக்களும் வழமைபோல அதை அப்படியே நம்பிவிட்டனர்.

ஆனால், தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளில் உள்ள சில அமைச்சர்களின் நெருங்கிய உறவினர்கள் முக்கியமான அரச பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்திகள் ஊடகங்களில் அடிக்கடி தலைகாட்டின. ஜனாதிபதி மைத்திரி தனது மகனை ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றது, அவரது மகள் அரச செல்வாக்கைப் பயன்படுத்தி பொது வைபவங்களில் கலந்து கொண்டமை என்பனவும் சர்ச்சைக்குள்ளாயின.

இப்பொழுது பிரதமர் ரணில் சர்ச்சையில் சிக்கியிருக்கிறார். அதாவது, அவர் தனது ஒன்றுவிட்ட சகோதரியான அமறி எம்.விஜயவர்த்தனவை பிரித்தானியாவுக்கான உயர் ஸ்தானிகராக நியமித்திருப்பது சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. ஆனால், 'நாய் குரைத்தாலும் வண்டி தன்பாட்டுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறது' என்பது போல, குடும்ப நியமனங்கள் இந்த ஆட்சியிலும் தொடரத்தான் போகின்றது. பாவப்பட்டவர்கள் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பிய அப்பாவிப் பொதுமக்கள்தான். *

# ரவி வர்மாவுக்காக தனி தபால் நிலையம்!

ராஜா ரவி வர்மா இந்தியாவின் புகழ்பெற்ற ஓவியர். அவர் வரைந்த கடவுள்களின் ஓவியங்களே முன்னைய காலங்களில் எல்லோர் வீட்டுச் சுவர்களையும் அலங்கரித்தன. அவர் வரைந்த ஓவியங்களைப் பாராட்டி ரசிகர்கள் எழுதும் கடிதங்கள் மாட்டு வண்டில்களில் (அந்தக் காலத்தில் அவைதான் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டன) பெருந்தொகையாக வந்து குவிந்தன. அதனால் அவருடைய கடிதங்களை விநியோகிப்பதற்காக அந்தக் காலத்தில் இந்தியாவை ஆட்சி செய்த பிரித்தானியர் தனியான தபால் நிலையமொன்றையே நிறுவினராம்!

# உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கலாமா?

சோடியம் குளோரைட் என்ற உப்பையே நாம் தினசரி உணவில் பயன்படுத்துகிறோம். இந்த உப்பை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தினால், இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு உட்படப் பல நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இந்த உப்புக்குப் பதிலாக சீனாவில் 50 வீதம் சோடியம், 50 வீதம் பொட்டாசியமும் மக்னீசியமும் கலந்த புதிய ரக உப்பொன்றை அந்நாட்டு அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இதனால் அந்த நாட்டில் இரத்தக் கொதிப்பு நோயும், சிறுநீரக நோயும் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. ஒரு தனி நபருக்கு ஒரு நாளைக்கு 5 கிராம் உப்பு போதுமானது என உலக சுகாதார ஸ்தாபனம் வகுத்துள்ளது.

# கண்ணகித் தெய்வம்

செவ்விலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கண்ணகி என்ற பெண் பாத்திரம் கற்புக்கு இலக்கணமாகப் போற்றப்படுகிறாள். அதனால் அவள் வாழ்ந்ததாகக் கருதப்படும் இந்தியாவிலும், அண்டைநாடான இலங்கையிலும் அவளுக்கு பல கோவில்கள் கட்டப்பட்டு மக்கள் அவளைத் தெய்வமாக வழிபட்டு




வருகின்றனர்.

வட இலங்கையிலும் கண்ணகி வழிபாடு இருந்தாலும், கிழக்கிலங்கையில்தான் கூடுதலான வழிபாடு நடைபெறுகின்றது. தமிழர்கள் மட்டுமின்றி, சிங்கள மக்களும் 'பத்தினித் தெய்யோ' என கண்ணகியை வழிபட்டு வருகின்றனர். கஜபாகு என்ற சிங்கள மன்னன் அந்தக் காலத்திலேயே 'பத்தினித் தெய்வம்' என்ற பெயரில் மட்டக்களப்பில் கண்ணகிக்குக் கோயில் ஒன்றைக் கட்டியிருக்கிறான். கண்ணகி பிறந்து வாழ்ந்த இந்தியாவை விட இலங்கையிலேயே கண்ணகி வழிபாடு அதிகமாக இருக்கிறது.

# கார்ட்டூன்

CARTOON என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'கேலிச்சித்திரம்' என்பது தமிழ்ப் பதம். ஒரு விடயத்தைப்பற்றி, அல்லது நபரைப்பற்றி கேலிச் சித்திரம் மூலம் விமர்சிப்பது அல்லது விளக்குவதே அதன் அர்த்தம்.

கேலிச் சித்திரத்துக்கு உள்ளாகுபவர்களில் அதை ரசிப்பவர்களும் உண்டு, கோபப்பட்டு அதை வரைந்தவர்களைப் பழி தீர்ப்பவர்களும் உண்டு.

இந்தியாவில் 'சங்கேர்ஸ் வீக்லி' (SANKER'S WEEKLY) என்ற வாரப் பத்திரிகை கேலிச் சித்திரத்துக்குப் பெயர்போனது. அதன் தொடக்கவிழாவில் பேசிய அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, "என்னை விட்டுவிடாதீர்கள் சங்கர்" என நகைச்சுவையாகப் பேசினார். அது அவரது விமர்சனத்தை மதிக்கும் பண்பை உணர்த்தியது. அவர் பேசியது போலவே, அப்பத்திரிகை 18 வருடங்களாக வாராவாரம் நேருவை கிண்டல் செய்து கேலிச் சித்திரங்களைப் பிரசுரித்தது. பின்னர் அந்த கேலிச் சித்திரங்கள் தொகுப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது. அப்புத்தகத்துக்கு முன்னுரை எழுதியவர் நேருவின் புதல்வியும், பிற்காலத்தில் இந்தியாவின் பிரதமராக இருந்தவருமான இந்திரா காந்தி. புத்தகத்தின் தலைப்பு, "என்னை விட்டுவிடாதீர்கள் சங்கர்" என்பதாகும்.

# உலக மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தினரிடம் செல்வந்தம்!

உலக சனத்தொகையில் ஒரு சதவீதமான செல்வந்தர்கள், அதாவது கிட்டத்தட்ட 7 கோடியே 30 லட்சம் பேர் உலகின் ஏனைய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க அதிக செல்வத்துக்கு சொந்தக்காரர்கள் என்று ஒக்ஸ்ஃபாம் (oxfam) எனப்படுகின்ற உதவி மற்றும் அபிவிருத்திக்கான தொண்டுநிறுவனம் கூறுகின்றது.

உலக சனத்தொகையின் அரைவாசியான வறிய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க அதிக செல்வம் உலக பணக்காரர்கள் வரிசையில் உள்ள 62 பேர் வசம் உள்ளதாகவும் உலக ஏற்றத்தாழ்வு பற்றிய ஒக்ஸ்ஃபாமின் புதிய அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

சுமார் ஏழரை ட்ரில்லியன் டொலர் (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் கோடி டாலர்) மதிப்பிலான செல்வத்தை உலக செல்வந்தர்கள் தங்களின் தாய்நாடுகளுக்கு வெளியே உள்ள வரிசெலுத்துவதிலிருந்து தப்பிக்கக்கூடிய இடங்களில் பதுக்கி வைத்துள்ளதாக அந்தத் தொண்டுநிறுவனம் கூறுகின்றது.

இந்த வரி ஏய்ப்பை முறியடிக்க அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒக்ஸ்ஃபாம் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வாறு பதுக்கிவைக்கப்பட்டுள்ள செல்வத்தில் சுமார் 50 ஆயிரம் கோடி மதிப்பிலான சொத்துக்களுக்கு செல்வந்த ஆப்பிரிக்கர்களே சொந்தக்காரர்கள் என்றும் கூறுகின்ற ஒக்ஸ்ஃபாம், அதனால் ஆப்பிரிக்கக் கண்டம் முழுமைக்கும் ஆண்டுக்கு 1400 கோடி டொலர் வரி இழப்பு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# கௌரவ (சாதி) கொலைகள்!

'கௌரவக் கொலைகள்' என அழைக்கப்படுவது, உயர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு ஆணோ பெண்ணோ தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை விரும்பித் திருமணம் செய்தால், அதனால் தமது சாதி அந்தஸ்துக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டது என்று கருதி, அந்த உயர் சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தவர்களாலேயே அவ்வாறு திருமணம் செய்து கொண்ட தமது பிள்ளைகளையோ அல்லது உடன் பிறப்புகளையோ தாமே கொலை செய்வதாகும். இந்தியாவில் இது சர்வசாதாரணமாகும். அவ்வாறான கௌரவக் கொலைகள் தமிழ்நாட்டில் 2014இல் 105 நடந்துள்ளதாக டாக்டர் கிருஸ்ணமூர்த்தி கூறியிருக்கிறார்.

# வில்லங்கம் தீர்க்கும் வில்வம்!

சைவ சமயத்தவர்களின் வழிபாட்டில் வில்வம் இலைக்கு பெரும் முக்கியத்துவம் உண்டு. குறிப்பாக சிவன் வழிபாட்டில் வில்வம் இலை ஒரு விசேட முக்கியத்துவம் வாய்ந்த பொருளாகும்.


வில்வ மரத்தில் மகா வில்வம், கொடி வில்வம், சித்த வில்வம், கற்பூர வில்வம் என 21 வகைகள் உண்டு. இதில் மகா வில்வம் மிக அரிதாகவே காணப்படும். வில்வ இலை அடுக்குகள் மூன்று, ஐந்து, ஏழு என்ற வகைகளில் காணப்படும். சாதாரணமாக கோயில்களில் காணப்படுவது மூன்று அடுக்கு வில்வமாகும்.

வில்வம் இலை வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டாலும், இலையும் வில்வம் பழங்களும் சித்த மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

# சூரியனை மட்டுமே நம்பி வாழ்பவர்கள்!

700 கோடி கொண்ட உலக சனத்தொகையில் சுமார் 110 கோடி மக்கள் எந்தவிதமான மின்சார வசதியும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

# டார்வினின் நாத்திக ஆதரவுக் கடிதம் ஏலத்தில் விற்கப்பட்டது


Private

Nov. 24 1880

Dear Sir

I am sorry to have to inform you that I do not believe in the Bible as a Divine revelation, & therefore not in Jesus Christ as the son of God.

Yours faithfully

Ch. Darwin

பரிணாம உயிரியல்வாதக் கோட்பாட்டை உருவாக்கிய இயற்கை அறிவியல்வாதி சார்ல்ஸ் டார்வின், தான் ஒரு நாத்திகன் என்று எழுதிய கடிதம் நியூயார்க்கில் செப்டம்பர் 21ம் தேதி 197,000 டாலர்களுக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

இந்தக் கடிதம் நியூயார்க் ஏலத்தில் சுமார் 90,000 டாலர்களைப் பெற்றுத் தரும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதனை விடவும் இருமடங்குக்கு அதிகமாக விற்கப்பட்டுள்ளது.

டார்வினின் மத நம்பிக்கை பற்றி எப்போதும் கடும் விவாதங்கள் நடைபெற்று வருவது வழக்கம். டார்வின் பொது இடத்தில் தனது நம்பிக்கை அல்லது நாத்திகம் பற்றி கூறியதில்லை, தன் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதாக அவர் தன் கருத்தை வெளிப்படுத்தாமல் இருந்தார் என்றும் கூறப்படுவதுண்டு.

இந்நிலையில் இளம் பாரிஸ்டர் ஒருவருக்கு டார்வின் எழுதிய கடிதம் ஒன்றில் அவர் வெளிப்படையாக தனக்கு பைபிள் மீதும், யேசு கிறிஸ்து கடவுளின் புதல்வன் என்பதிலும் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இளம் பாரிஸ்டர் பிரான்சிஸ் மெக்டர்மட் 1880ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி டார்வினுக்கு எழுதிய கடிதத்தில், ''உங்கள் நூல்களை வாசிப்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்றாலும், பைபிள் மீது நான் நம்பிக்கை இழந்து விடவில்லை. இருப்பினும் நான் உங்களுக்கு இதனை எழுதும் காரணம் என்னவெனில் உங்களுக்கு பைபிள் மீது நம்பிக்கை இருக்கிறதா? ஆம் அல்லது இல்லை என்ற பதில் எனக்கு போதுமானது'' என்று எழுதியிருந்தார்.

இதற்கு பதில் கடிதம் எழுதிய டார்வின், ''பைபிள் ஓர் இறைவெளிப்பாடு என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை, ஆகவே, யேசு கிறிஸ்து கடவுளின் புதல்வன் என்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை'' என்று எழுதினார்.

இந்த குறிப்பை அவர் எழுதுவதற்கு ஒரு மாதம் முன்பு, அவருடைய சமகாலத்திய முக்கிய நாத்திகவாதியான எட்வர்ட் ஏவ்லிங் என்பவருக்கு அவர் எழுதிய போது, ''மதம் பற்றி நான் எழுதுவதை எப்பொதுமே தவிர்த்து வருகிறேன். நான் ஒரு அறிவியல்வாதியாகவே இருக்க விரும்புகிறேன்'' என்றார்.

ஆனால் டார்வினுக்கு மெக்டர்மட் இந்த கடிதம் வெளியிடப்பட மாட்டாது என்று வாக்குறுதி அளித்திருந்தார். இதனால் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இது வெளிவரவில்லை.

# இலங்கையுடன் ‘பெரியண்ணன்’ விளையாட்டு விளையாடும் இந்தியா!

***1948*** பெப்ருவரி 4ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கை ஒரு சுதந்திர நாடு என்ற அந்தஸ்தில் இருந்து வருகிறது. சுதந்திரம் பெற்ற போது இலங்கை பிரித்தானியர் வரைந்த சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் இருந்தது. பின்னர் 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் இலங்கையர்களாலேயே தமக்குப் பொருத்தமானது என இரு அரசியல் சாசனங்கள் வரையப்பட்டன. மீண்டும் ஒரு புதிய அரசியல் சாசனம் வரைவதற்கான முயற்சிகள் தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

என்னதான் இலங்கை தன்னை ஒரு சுதந்திர நாடு எனச் சொல்லிக் கொண்டாலும், அதன் செயற்பாடுகளில் அந்நிய ஆதிக்கத்தின் நிழல் தொடர்ந்து படிந்து கொண்டே வந்திருக்கிறது. குறிப்பாக, இலங்கை இந்தியாவுக்கு மிக அண்மையில், ஆக 20 மைல் மட்டுமேயான தொலைவில் அமைந்திருப்பதால், அதன் மீது இந்தியாவின் ஆதிக்கம் கண்ணுக்குப் புலப்படாத வகையிலும், புலப்படும் வகையிலும் இருந்து வருகிறது. அதிலும், இந்தியா தனது பகையாளி நாடு என்று கருதும் சீனாவுடன் இலங்கை எல்லாத் 'தட்பவெப்ப' நிலைகளிலும் நல்லுறவைப் பேணி வருவதால், இலங்கை மீது இந்தியாவின் நெருக்குவாரம் மேலும் அதிக எடையுள்ளதாக அதிகரித்து வருகிறது.

இதற்கு ஒரு உதாரணம் முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம். அவரது அரசாங்கம் சீனாவுடன் சற்றுக் கூடுதலான (பொருளாதாரத் தேவைகளுக்காகவும், புலிகளுடனான யுத்தத் தேவைகளுக்காகவும்) உறவைக் கொண்டிருந்ததற்காக, மேற்கு நாடுகளினதும் இந்தியாவினதும் சீற்றத்துக்கு உள்ளாகி ஆட்சியையே இழக்க வேண்டி வந்தது.

இந்தியா தனது ஆதிக்கத்தை இலங்கை மீது திணித்ததிற்கு மிக அண்மைய உதாரணமாக, பாகிஸ்தானிடமிருந்து JF17 ரக யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்ய எடுத்த முயற்சி அமைந்திருக்கிறது. இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டிருந்தன. அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் நவாப் செரீப் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் இந்தியா தலையிட்டு அதைத் தடுத்துவிட்டது.

**மகாதேவன்**

புலிகளுக்கு எதிரான போரின் போது இலங்கை அரசு மேற்கு நாடுகள், சீனா, ரஸ்யா என்பனவற்றிடமிருந்து மட்டுமின்றி, பாகிஸ்தானிடமிருந்தும் ஏராளமான நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது. அப்பொழுதெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த இந்தியா, இப்பொழுது போர் விமானங்கள் வாங்க முற்படுகையில் மட்டும் குறுக்கே விழுந்து தடுப்பானேன் என்ற கேள்வி பலரிடம் எழுந்திருக்கிறது.

ஆனால் இந்தியாவின் இலங்கை சம்பந்தமான கொள்கைகளையும், அணுகுமுறையையும் தொடர்ந்து அவதானித்து வருபவர்களுக்கு இந்தியாவின் செய்கை ஆச்சரியமளிக்கவில்லை. ஏனெனில் இந்தியாவின் 'பெரியண்ணன்' பாணியிலான இலங்கை மீதான செயல்பாடுகள் அவர்களுக்கு ஏற்கெனவே பரிச்சயமானவை.

அதாவது, இந்தியா புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்ட பின்னரும், புலிகள் ராஜீவ் காந்தியைக் படுகொலை செய்த பின்னரும், அவர்களை இந்தியா தனது பிரதான எதிரியாகவே கணித்து வந்தது. அதன் காரணமாக புலிகளுக்கு எதிரான போரின்போது இந்தியா இலங்கைக்கு பல வழிகளில் உதவி செய்தது. ஆனால் தமிழகத்தின் நெருக்குதல் காரணமாக ஆயுதரீதியாகப் பெருமளவு உதவ முடியவில்லை. 'யார் குற்றியாவது அரிசியாகட்டும்' என்ற கணக்கில், அந்த உதவியை சீனா, பாகிஸ்தான் உட்பட ஏனைய நாடுகள் உதவட்டும் என அமைதியாக இருந்து கொண்டது.



ஆனால் இப்பொழுது புலிகள் ஒழித்துக் கட்டப்பட்டுவிட்டார்கள். எனவே, இனிமேலும் இலங்கைக்கு சீனா, பாகிஸ்தான் போன்ற தனது எதிரி நாடுகளுடன் என்ன வேலை? என்பதுதான் இந்தியாவின் கேள்வி. அதுவும் மிக நவீன ரக போர் விமானங்களை, அதுமட்டுமின்றி சீனாவினால் வடிவமைக்கப்பட்ட விமானங்களை, இலங்கை கொள்வனவு செய்வது எதற்காக என்பதுதான் இந்தியாவின் அடுத்த கேள்வி.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை வாங்கவிருந்த JF17 ரக விமானங்கள், அமெரிக்காவின் F16 ரக விமானங்களுக்கு சமமானவையாகும். அவை

சீனாவில் வடிவமைக்கப்பட்டு, பாகிஸ்தானில் தயாரிக்கப்படுபவை. ஆனால் அவையின் உதிரிப் பாகங்கள் சீனாவிலேயே தயாரிக்கப்பட்டு, பாகிஸ்தானில் பொருத்தப்படும் வேலை மட்டுமே நடைபெறுகிறது என்பது இந்தியாவின் சந்தேகம்.

'இப்படியான ஒரு நவீன ரகப் போர் விமானம் போர் முடிந்த பின்னர் இலங்கைக்கு எதற்காக?' என்ற இந்தியாவின் கேள்விக்கு, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கருணசேன ஹெட்டியாராய்ச்சி சற்றுக் காட்டமாகவே பதிலளித்திருக்கிறார். அவர், "போர் இல்லாத சூழலிலும் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்பது சாதாரண மூலோபாய அறிவுள்ளவர்களுக்கே புரியும்" எனக் கூறியிருக்கிறார்.

ஆனால் இந்தியா இந்த விவகாரத்தை வேறு விதமாக நோக்குகிறது. அதாவது, இந்த விமானங்களை இலங்கை கொள்வனவு செய்வதற்கு அனுமதித்தால், அதைச் சாக்காக வைத்து பாகிஸ்தானோ அல்லது சீனாவோ அவ்விமானங்களின் பராமரிப்புக்கென நிலையம் ஒன்றை இலங்கையில் அமைக்க வழியேற்படலாம் என இந்தியா கருதுகிறது. அப்படி நடந்தால், அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என அது நினைக்கிறது. ஏற்கெனவே மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், திரிகோணமலையிலுள்ள சீனக்குடாவில் சீனா விமானப் பராமரிப்புத் தளம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்ட போது, அதையும் இந்தியா தலையிட்டு தடுத்து நிறுத்தியிருக்கிறது.

ஏற்கெனவே இலங்கையிடம் சீனத் தயாரிப்புகளான F7 ரக போர் விமானங்கள், K8 ரக பயிற்சி விமானங்கள், Y12 –Y8 ரக போக்குவரத்து விமானங்கள், MA 60 ரக பயணிகள் விமானங்கள் என்பன இருப்பது இந்தியாவுக்கு உறுத்தலான விடயமாகும்.

இலங்கை பாகிஸ்தானிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதைத் தடுப்பதற்கு இந்தியா கைக்கொண்டது ஒரு சுவாரசியமான வழிமுறையும் கூட, இந்தியாவின் அகங்காரத்தன்மையை எடுத்துக் காட்டுகிறது. விமானக் கொள்வனவைக் கைவிடும்படி இலங்கைக்கு இந்தியா விடுத்த 'அன்பு' வேண்டுகோள், முறைப்படியான இந்திய அரசின் கடிதத் தலைப்பு (Letter Head) எதிலும் அனுப்பப்படவில்லை. சாதாரண ஒரு வெள்ளைத் தாளில் எழுதப்பட்டே அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தை சிரேஸ்ட ஊடகவியலாளர் நிருபமா சுப்பிரமணியன் ('துக்ளக்'சோவின் மருமகள்) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் அம்பலமாக்கியிருக்கிறார்.

இதைப் பார்க்கும் போது, இது போன்றதொரு இன்னொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் படைகள் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கென வடமராட்சிப் பகுதியில் 'லிபறேசன் ஒப்பிறேசன்'என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட நேரத்தில், ஜே.ஆரை வழிக்குக் கொண்டு வருவதற்காக அப்பொழுது இலங்கையில் இந்தியாவின் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்சிற், இவ்வாறுதான் பயன்படுத்திய ஒரு கடித உறையில் பென்சிலால் எழுதி ஜேஆருக்கு ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார்.

இப்படியான செய்கைகள் தனக்கு எதிரில் இருப்பவரை ஆணவத்துடனும், அகங்காரத்துடனும் அடிபணிய வைக்கும் ஒரு வழிமுறை என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்படியான இந்தியாவின் செயல்பாடுகள், அந்த நாட்டுடன் இலங்கை கொண்டிருந்த தேனிலவுக் காலத்தை படிப்படியாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் முன்னைய மகிந்த அரசு சீனாவுடன் நெருங்கிச் செயல்படுகிறது என்று கருதித்தான், அந்த அரசை முடிவுக்குக் கொண்டு வருவதில் மேற்கு நாடுகளுடன் இந்தியா கரம் கோர்த்தது. அதன் காரணமாக மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியானதும் இந்தியாவுக்கு அதற்கு நன்றி தெரிவிப்பதற்காக தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தையும் மேற்கொண்டார். அத்துடன் தன்னை ஜனாதிபதி ஆக்கியவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக சீனா இலங்கையில் ஆரம்பித்திருந்த சில அபிவிருத்தித் திட்டங்களையும் முடக்கி வைத்தார்.

ஆனால், இந்தியாவின் 'பெரியண்ணன்'வகைச் செயல்பாடுகள் இலங்கையை மீண்டும் சீனாவை நோக்கிப் போக வைத்துள்ளது. கொழும்பு துறைமுக நகரத் திட்டம், அம்பாந்தோட்டை துறைமுக இரண்டாம் கட்ட நடவடிக்கை உட்பட சீனாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை மீளவும் ஆரம்பிக்க இலங்கை அரசு பச்சைக்கொடி காட்டியுள்ளது.

அண்மையில் சுவிற்சிலாந்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் பங்குபற்றிய இலங்கைப் பிரதிநிதிக்குழுவில் ஒருவராகச் சென்றிருந்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ச்சுனா மகேந்திரன், "முன்னைய ஆட்சிக் காலத்தை விட தற்போதைய ஆட்சிக் காலத்தில் சீன முதலீடுகள் அதிகமாக வரவுள்ளன" எனத் தெரிவித்திருப்பது வெறும் செய்தியல்ல. இலங்கை அயல் உறவுகளில் செய்துள்ள திருத்தத்தையே அது எடுத்துக் காட்டுகிறது.

---

*ஓரிடத்திற்கோரிடம் வித்தியாசமாக பொருளாதார வளர்ச்சியும், அரசியல் வளர்ச்சியும் ஏற்படுத்துவது முதலாளித்துவ சமூக அமைப்பின் நிரந்தரமான விதி. ஆகவே சோசலிசம் வெற்றியடைவதென்பது, முதலில் அநேக தேசங்களிலேயோ அல்லது தனியான ஒரு தேசத்திலேயோ சாத்தியமாகும்.*

**–லெனின்**

# இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகையின் போது வட பகுதி மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்!

அண்மையில் இலங்கை – இந்திய பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்கு இந்திய வெளியுறவுச்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இலங்கைத் தலைநகர் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். அவரது வருகையின் போது கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் நடைபெற்றது.

வழமையாக சிங்கள மத்தியில் இருந்தே இந்தியாவுக்கு எதிராக ஏதாவது ஆட்சேபனைகள் கிளப்பப்படுவதுண்டு. ஜே.வி.பி. 'தோழர்கள்' இதில் முன்னணியில் நிற்பார்கள். ஆனால் இம்முறைப் போராட்டம் சற்று வித்தியாசமானது. இம்முறை போராட்டம் நடாத்தியவர்கள் தமிழகத் தமிழர்களின் 'இரத்த உறவுகள்' என அங்குள்ளவர்களால் வர்ணிக்கப்படும் இலங்கைத் தமிழர்களின் ஒரு பிரிவினரான வட பகுதி மீனவர்கள்.

தமிழக மீனவர்கள் இலங்கை (வட பகுதி)க் கடற்பரப்பில் அத்துமீறி ஊடுருவி, பயன்படுத்தக்கூடாத வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்து, தமது வயிற்றில் அடிப்பதை ஆட்சேபித்து, அதை இந்திய வெளிவிவகார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்தப் போராட்டம் வட பகுதி மீனவ சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இதற்கு முன்னரும் வட பகுதி மீனவர்கள் பல போராட்டங்களை நடாத்தியிருந்த போதிலும், அதைக் கண்டு கொள்ளாத இந்திய, இலங்கை அரசுகள் இதையும் கணக்கில் எடுக்குமோ என்னவோ?

அதேநேரத்தில், வட பகுதி மீனவர்கள் பிரச்சினை குறித்து பல வருடங்களாக கண்டுகொள்ளாமல் இருந்து வந்த அவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், முதல் தடவையாக இந்திய வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தபோது இதைப்பற்றியும் பேசியுள்ளனராம்! வேடிக்கைதான். வட பகுதி மீனவர்கள் தமது பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், அதைச் சர்வதேச அரங்குக்கு எடுத்துச் செல்லப்போவதாக விடுத்த மிரட்டலால் அதிர்ந்து போனார்களோ என்னவோ?

**– சங்கரன்**

# கிளிநொச்சி தெங்கு பனம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்று வரும் ஊழல்கள், மோசடிகள் என்பனவற்றை விசாரணை செய்யக் கோரி, அத்துறை சார்ந்த தொழிலில் ஈடுபடும் சுமார் 150 தொழிலாளர்கள் சங்கப் பணிமனை முன்பு பெப்ருவரி 5ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர்.

நீண்டகாலமாக இந்த மோசடிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததின் காரணமாகவே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடிவு செய்தனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பின்னரே, வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன் கிளிநொச்சிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். ஆனால் அவராலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. அதனால் தொழிலாளர்கள் வட மாகாண கூட்டுறவு அமைச்சருடன் பேச்சு நடாத்துவதற்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

இதில் ஒரு குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், முன்பு வடபகுதியில் மரவரி முறையே அமுலில் இருந்தது. அந்த முறையின் கீழ் வசதி படைத்த உயர் சமூகத்தினர், கள்ளிறக்கும் தொழில் செய்த தாழ்த்தப்பட்ட மக்களை வைத்துத் தொழில் செய்வித்து தாமே கள்ளுத் தவறணைகளை நடாத்தி, அந்த மக்களையும் பொதுமக்களையும் சுரண்டி வந்தனர். இந்த நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறைக்கு முடிவு கட்டுவதற்காக கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான கள் சீவும் தொழிலாளர் சங்கம் போராடி வந்தது. அவர்களின் போராட்டத்தைக் கவனத்தில் கொண்டு, 1970 சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் நிதி அமைச்சர் பொறுப்பை வகித்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா, கள்ளு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கென தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களை வடக்கில் உருவாக்கினார். அந்தச் சங்கங்கள் தொழிலாளர்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தன.

அந்தச் சங்கங்கள் கள் உற்பத்தியில் மட்டுமின்றி, மிதமிஞ்சிய கள்ளை சாராயமாக வடிப்பதிலும், பனங்கட்டி உற்பத்தியிலும், பனை ஓலைகளிலிருந்து பன்ன வேலைப் பொருட்கள் உற்பத்தியிலும் ஈடுபட்டு வந்தன. இதனால் தொழிலாளர்கள்

முன்னைய மரவரி கொத்தடிமை முறையிலிருந்து விடுபட்டு, ஓரளவு வறுமையில்லாது தமது வாழ்க்கையை ஓட்ட முடிந்தது.

ஆனால் 'கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட' கதையாக இந்தச் சங்கங்களிலும் ஊழல் பெருச்சாளிகள் புகுந்து கொண்டன. அவர்கள் வேறுயாருமல்ல. அந்த ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து உருவான சில பேர்வழிகள்தான் அந்தக் கைங்கரியத்திலும் ஈடுபட்டனர். அவர்களது இந்த ஊழல் மோசடி நடவடிக்கைகளுக்கு கூட்டுறவுத்துறையில் உயர் பதவி வகித்த சில மேட்டுக்குடியினரும் ஒத்துழைப்பு வழங்கினர். இவ்வாறுதான் இந்தச் சங்கங்களில் முறைகேடுகள் தலைதூக்கின.

இன்று இந்த நோய் கிளிநொச்சிச் சங்கத்தில் மட்டுமன்று வடக்கில் உள்ள அத்தனை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களிலும் நிலவுகின்றது. இதற்குத் தீர்வு காண்பதற்கு ஒரேவழி, தொழிலாளர்கள் தம்மை ஒரு ஸ்தாபன அமைப்பாக்கி, தமது உரிமைகளுக்கான போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்பதுதான்.

**–வயிரமுத்து**



# கிளிநொச்சி ஆடைத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

**கி**ளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள வானவில் (மாஸ்) என்ற ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 2000இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஜனவரி 21ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர். கொழும்பை மையமாகக் கொண்ட இத்தொழிற்சாலையின் ஆளணி முகாமையாளர் ஒருவர் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு நிர்வாகத்துடன் அடிக்கடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்ததால், அவர்மீது வெறுப்புக்கொண்ட நிர்வாகம் அவரைப் பணி நீக்கம் செய்திருந்தது. தகுந்த காரணமின்றி அவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்தும், அவரை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் அங்கு பணி புரியும் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. தொழிலார்களில் பெரும்பாலோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்துடன் கூடுதலான நேரம் வேலை வாங்கப்பட்டு மிகவும் மோசமாக சுரண்டப்டுகிறார்கள் எனவும் தெரிய வருகிறது.

இத்தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்துடன் படிகள் உட்பட மாதாந்தம் 13,370 ரூபா மட்டுமே வழங்கப்படுவதாகவும், வாரத்தில் ஆறு நாட்கள் காலை 7.24 முதல் மாலை 5.30 மணிவரை சுமார் 10 மணித்தியாலங்கள் தினசரி வேலை வாங்கப்படுவதாகவும், உணவுக்கு 30 நிமிடங்களும், தேநீருக்காக 15 நிமிடங்களும் மட்டுமே இடைவேளை வழங்கப்படுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதைப் பார்க்கும் போது, இலங்கையின் ஆகக்கடைமட்ட தொழிலாளர்களான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் சலுகைகள் இவர்களுடையதை விடப் பரவாயில்லை போலத் தோன்றுகிறது.

நாட்டில் 30 வருடகாலப் போரை மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு 2009இல் முடித்து வைத்த பிறகு, யாழ்ப்பாணப் பகுதியில் புழக்கத்தில் உள்ள வெளிநாட்டுப் பணத்தைக் குறி வைத்து அங்கு ஏராளமான கொழும்பு வங்கிகளும், நிதி நிறுவனங்களும் படையெடுத்தன. ஆனால் வன்னி மக்களிடம் அவ்வளவு துாரம் பணப்புழக்கம் இல்லை. ஆனால் அந்த போரினால் பாதிக்கப்பட்ட ஏதிலி மக்களிடம் போதியளவு உழைப்புச் சக்தி உண்டு. அதை மலிவாகப் பெறக்கூடிய வாய்ப்பும் உண்டு.

அதனால் வானவில் போன்ற ஆடைத் தொழிற்சாலைகள் அங்கு தமது மூலதனத்தைக் கொட்டி அந்த மக்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டி வருகின்றன. இப்பொழுது இதுபோன்ற கொழும்பை மையமாகக் கொண்ட பிரபல ஆடைத்தொழிற்சாலை ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் பெரும் ஆடைத்தொழிற்சாலையொன்றைத் தொடக்க இருப்பதாகத் தகவல் வந்துள்ளது.

இந்தக் கொள்ளைச் சுரண்டல் பற்றிக் கேட்டால், "ஒன்றும் இல்லாமல் இருந்தவர்களுக்கு நாங்கள் தொழிற்சாலை திறந்து வேலைவாய்ப்புக் கொடுத்தால், எங்களை இப்படிக் குறை கூறுகிறீர்களே" என்றுதான் அதை நடாத்துபவர்கள் கூறுவார்கள். இது 'ஆடு நனைகின்றதென்று ஓநாய் அழுத' கதைதான்.

உண்மை என்னவென்றால், இந்த மக்களிடம் உள்ள பாசத்தால் அவர்கள் இந்த இடங்களில் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவில்லை. கொழும்பிலோ, தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலோ உள்ள மக்கள் முதலாளிகளின் சுரண்டல் பற்றியும், தொழிலாளர்களின் வேதனம் மற்றும் உரிமைகள் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். தொழிற்சங்கப் போராட்ட அனுபவமும் நிறைய உடையவர்கள். அவர்களிடம் குறைந்த கூலிக்கு அவர்களது உழைப்பைச் சுரண்ட முடியாது என்பது இந்த முதலாளிகளுக்குத் தெரியும்.

ஆனால், வடக்கு கிழக்கு மக்கள், அதிலும் வன்னிப் பிரதேச மக்கள் நீண்டகாலமாக 'விடுதலைப் போராட்டம்' என்ற காரணத்தைச் சொல்லி புலிகளால் சுமார் 30 வருடங்கள் இருட்டில்

வைக்கப்பட்டிருந்ததின் காரணமாக, வறுமையில் வாடும் அந்த மக்களை சுலபமாக ஏமாற்றிச் சுரண்டலாம் என்ற எண்ணத்திலேயே இந்த முதலாளிகள் அங்கு படையெடுத்து முதலீடு செய்கிறார்கள்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பில் பணம் படைத்தவர்கள் தொழில் தொடங்கி நடாத்துவதை யாரும் தடுக்க முடியாது. அவர்களது தொழில்களில் ஏழை மக்களுக்குத் தொழில் கொடுப்பதும் நல்ல விடயம்தான். ஆனால் மனிதாபிமான அடிப்படையிலும், சட்டத்தின் பிரகாரமும், அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளமும், இதர உரிமைகளும் வழங்குவது அவசியமல்லவா? ஆனால் அவற்றை எந்தவொரு முதலாளியும் தானாக வழங்குவான் என எதிர்பார்க்க முடியாது.

இந்த விடயத்தில் தொழிலாளர்கள்தான் தமக்காகப் தாமே போராட வேண்டும். அவர்கள் தொழிற்சங்க அனுபவம் வாய்ந்த தென்னிலங்கை மற்றும் மலையகத் தொழிலாளர்களிடமிருந்து அவர்களது அனுபவங்களைக் கற்றுக்கொண்டு தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும்.

**–சந்திரன்**

---

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பின்னர் இரு கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கொள்கையையும் முன்வைத்தார்கள். ஆனால் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம் ஒன்று 30 வருட காலம் நடந்து தோல்வியிலும் பாரிய அழிவிலும் முடிந்த பின்னர், இன்று ஏறக்குறைய அனைத்துத் தமிழர் தரப்புகளும் மீண்டும் சமஸ்டி என்ற கொள்கைக்கு வந்திருக்கின்றன.

அதாவது இன்றைய யதார்த்தம் என்னவென்று பார்த்தால், சிங்களப் தரப்பு ஒற்றையாட்சியை வலியுறுத்தும் நிலையும், தமிழர் தரப்பு சமஸ்டி கொள்கையை வலியுறுத்தும் நிலையுமே காணப்படுகிறது. அதாவது இருதரப்பினரும் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இனப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்ட போது என்ன நிலைப்பாட்டில் இருந்தனரோ, அதே நிலைப்பாட்டில்தான் இன்றும் இருக்கின்றனர். இந்த எதிரும் புதிருமான நிலை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு ஒருபோதும் உதவாது.

முதலில் அரச தரப்பை அல்லது சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முழுத்தரப்பையும் எடுத்துக் கொண்டால், அவர்கள் ஒற்றையாட்சியைத் தொடர்ந்து கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பது தவறானது. அப்படி அவர்கள் இருப்பது மனித நீதிக்கு அப்பாற்பட்டது என்பது மாத்திரமல்ல, மீண்டும் இலங்கையில் இனப் பிரச்சினையை உக்கிரப்படுத்தவே உதவும். அதுவும் இலங்கை இனப் பிரச்சினையில் சர்வதேச சக்திகள் என்றழைக்கப்படும் வல்லாதிக்க சக்திகளின் ஆதிக்கம் நேரடியாக ஏற்பட்டு, இலங்கையில் அவர்களுக்குச் சாதகமான ஆட்சி மாற்றம் ஒன்றும் ஏற்பட்ட பின்னர், சிங்களத் தரப்பினர் தொடர்ந்தும் பேரினவாதக் கொள்கையில் விடாப்பிடியாக நின்றால், அது இலங்கையில் பங்களாதேஸ், சைப்பிரஸ், கிழக்கு திமோர், எரித்திரியா, சூடான் போன்ற பிரச்சினைகளில் இந்த வல்லாதிக்க சக்திகள் தலையிட்டு தமக்குச் சார்பாகத் தீர்வு கண்டது போன்ற நிலையைத்தான் உருவாக்கும்.

மறுபக்கத்தில், தமிழர் தரப்பு காலத்துக்காலம் பல தீர்வுகளை முன்வைத்து இன்று மீண்டும் சமஸ்டிக் கொள்கையை வந்தடைந்திருப்பது, அவர்கள் இலங்கையில் நிலவும் யதார்த்த சூழலில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை எவ்வாறு தீர்வு காண்பது என்பதில் தெளிவில்லாதவர்களாக அல்லது தமது சுய அரசியல் இலாபத்துக்காக பிரச்சினையைத் தீர்க்க விரும்பாதவர்களாக இருந்துள்ளார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. அதேநேரத்தில் இன்று அவர்கள் முன்வைக்கும் சமஸ்டித் தீர்வு கூட, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சரியான வழிமுறை அல்ல.

தமிழரசுக் கட்சி 1949இல் உருவாக்கப்பட்ட போதுதான் சமஸ்டிக் கொள்கை முதன்முதலாக முன்வைக்கப்பட்டது. அதுவும் அக்கட்சி தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குப் பெறுவதற்காக தமிழில் 'தமிழரசுக் கட்சி' (அதாவது தமிழர்களுக்கு தனியான அரசு வேண்டும் கட்சி என்ற அர்த்தப்பட) என்றும், சிங்கள மக்களையும் உலகையும் ஏமாற்ற ஆங்கிலத்தில் Federal Party (சமஸ்டி கட்சி) என்றும்தான் பெயர் சூடியது.

அவர்கள் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்த காலத்தில் இல்லாவிட்டாலும், 1956 தேர்தலில் அவர்கள் தமிழ் காங்கிரசைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று, தமிழ் பேசும் மக்களின் பிரதான அரசியல் கட்சி ஆன பின்னர், வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமின்றி முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் மத்தியிலும் தமிழரசுக் கட்சிக்கு செல்வாக்கு ஏற்பட்டது.. அதன் காரணமாக வடக்கு மற்றும் மலையகத் தமிழர்கள், முஸ்லீம்கள் உட்பட "35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவர்" என தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அழைக்கப்பட்டார்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் இனவாதக் கொள்கை காரணமாக காலப்போக்கில் முஸ்லீம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் தத்தமது யதார்த்தச் சூழலுக்கு ஏற்ப தமக்கான அரசியல் தலைமையை உருவாக்கிக் கொண்டு, பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் இணக்க அரசியலுக்குச் சென்றுவிட்டனர். அதுமாத்திரமல்லாது, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மையவாதத் தலைமையிலிருந்து விடுபட ஆரம்பித்துவிட்டனர்.

இன்னொரு பக்கத்தில் அன்று கிழக்கிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த ஒரு சூழலில், வடக்கையும் கிழக்கையும் சேர்த்து தமிழரசுக் கட்சி சமஸ்டி அமைப்புக் கோரியதற்கு அவர்கள் அளவிலாவது ஒரு நியாயப்பாடு இருந்தது. ஆனால் அவர்களது நடைமுறைச்சாத்தியமற்றதும், புத்திசாலித்தனமற்றதுமான கொள்கைகளால் கிழக்கின் இன விகிதாசாரம் பெருமளவு மாறிவிட்டது. இன்று கிழக்கில் முஸ்லீம்களும் சிங்களவர்களும் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கினராகவும், தமிழர்கள் மூன்றில் ஒரு பங்கினராகவும் வாழும் சூழல்தான் நிலவுகின்றது. அதும்டுமல்லாமல், வடக்கு கிழக்கில் வாழுகின்ற முஸ்லீம் மக்கள் தமக்கென தனியான முஸ்லீம் நிர்வாக அலகொன்றைக் கோருகின்ற நிலைமையும் உருவாகிவிட்டது.

இந்தச் சூழலில், வடக்கையும் கிழக்கையும் சேர்த்து இலங்கைத் தமிழர்களுக்கென்று சமஸ்டி அமைப்பைக் கோருவது நடைமுறைச்சாத்தியமற்றது, பொருத்தமில்லாதது, மேலும் புதிய பிரச்சினைகளை உருவாக்கக்கூடியது. எனவே தமிழ் தலைமைகள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல "சமஸ்டி..சமஸ்டி" என்று மீண்டும் மீண்டும்

சொல்வதால், எந்தவிதமான ஆக்கபூர்வமான நன்மையும் நிகழப்போவதில்லை.

அதுமாத்திரமின்றி, சிங்கள இனவாத சக்திகள் மட்டுமின்றி, 'நல்லாட்சி' என்று கூறிக்கொண்டு, மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பறித்து வரும் இன்றைய அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது நிலைப்பாடு ஒற்றையாட்சிதான் என்பதைப் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்திச் சொல்லிவிட்டார்கள். எனவே, புதிய அரசியல் அமைப்பு மூலம் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு வரப்போகிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்துகின்ற மாலை போலித்தனமானது.

உண்மையில் தமிழ் தலைமைகள் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண விரும்பினால், நடைமுறைச்சாத்தியமற்ற சமஸ்டிக் கொள்கையில் தொங்கிக் கொண்டிருக்காமல், யதார்த்த நிலைமைக்கு ஏற்பச் செயற்பட வேண்டும். அப்படிச் செய்வதானால் அவர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் உள்ளன.

ஒன்று, 2000ஆம் ஆண்டில் அப்போதைய சந்திரிக குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வு யோசனைகளில் உள்ளடங்கியிருந்த வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பிரதேசங்களை ஒன்றிணைத்து அமைப்பதற்கு உத்தேசித்திருந்த 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற திட்டத்தை அமுலாக்கக் கோருவது. சந்திரிக இன்றைய அரசை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்ததால், அவர் மூலமே இந்த நகர்வைச் செய்ய முடியும். அந்த முயற்சிக்கு இடதுசாரிக் கட்சிகளினதும், ஐ.தே.க, சிறீ.ல.சு.கட்சிகளில் உள்ள ஜனநாயக சக்திகளினதும் ஆதரவையும் பெற முடியும். (முஸ்லீம் மக்களின் தனி அலகுக் கோரிக்கையையும் சாதகமாகப் பரிசீலிப்பது அவசியமானது)

இரண்டாவது, தற்போதுள்ள மாகாணசபை முறைமையை இந்தியாவினது உதவியுடன் முழுமையாக (காணி — பொலிஸ் அதிகாரங்கள் உட்பட) அமுலாக்கக் கோருவது.

இந்த இரண்டு வழிமுறைகளுமே இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு சாத்தியப்படக்கூடிய தீர்வுகளாகும். அதைவிடுத்து, சமஸ்டி என்று மீண்டும் கோருவது நடைமுறைச்சாத்தியமற்றது மட்டுமல்ல, அந்த வார்த்தையால் (அது பிரிவினைக்கொப்பானது என) ஏற்கெனவே அரண்டு போயிருக்கிற சிங்கள மக்களை மேலும் அச்சமூட்டி பிரச்சினையைச் சிக்கல்படுத்துவதிலேயே முடியும்.

மேற்கத்தைய சக்திகளின் உதவியுடன் இலங்கையில் அவர்களுக்குச் சாதகமான மைத்திரி — ரணில் அரசு உருவாகியிருக்கின்ற இன்றைய சூழலை பொன்னான வாய்ப்பு என்று வர்ணிக்கின்ற, அந்த அரசுடன் சங்கமித்துப் போய் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பும், இதர தமிழ்த் தலைமைகளும், இதைக் கவனத்தில் கொள்வார்களா அல்லது வழமைபோல இனவாதமும் பிரிவினைவாதமும் பேசி, தமிழ் சமூகத்தை மீண்டும் மீண்டும் படுகுழியில் தள்ளப் போகிறார்களா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' நாளேடு, "புதிய அரசியல் யாப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் இல்லை: கூட்டமைப்பிற்கு அரசு தெரிவிப்பு" என்ற தலைப்பில் பெப்ருவரி 14ஆம் திகதி செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தி கூறுவதாவது:

"புதிய அரசியல் யாப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் இல்லை என்றும், 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள சில அதிகாரப்பரவலாக்கல் முறைகள் உட்புகுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் கூறியுள்ளது".

இதுபற்றி கருத்து வெளியிட்ட சில அரசியல் அவதானிகள், "மைத்திரி — ரணில் அரசிலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதையே இந்த அறிவிப்புக் காட்டுகிறது. இந்த அரசாங்கத்திற்கு இனப் பிரச்சினைத் தீர்வில் அக்கறை இல்லை என்பதை மட்டுமின்றி, 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்வதற்கு இந்தியாவும் அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது. இது இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டுவந்து, அதை ஆதரித்துக் கொண்டு இருக்கும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக்கு பலத்த அடியாகும். அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு தீவிர தமிழ்த் தேசியவாதிகளின் கை ஓங்குவதற்கு வழிவகுக்கும்" எனக் கூறியுள்ளனர். *

## எய்லீன் அம்மையார் காலமானார்

*எழுத்தாளரும், கல்வியாளருமான கலா கீர்த்தி எய்லீன் சிறிவர்த்தன* (Eileen Siriwardhana) *அம்மையார் தமது 87ஆவது வயதில் நுகேகொடவில் உள்ள தனது வீட்டில் ஜனவரி 22இல் காலமானார். எய்லீன் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமிக்க கல்வியாளரும் எழுத்தாளருமாவார். அவர் எழுதிய* "Balan Harimi Kadaturuwa" *என்ற நாவல் 1984இல் டீ.ஆர்.விஜயவர்த்தன விருது பெற்றது.*

*அவர் நுகேகொட சமுத்திரா தேவி வித்தியாலயம், கொழும்பு விசாகா வித்தியாலயம் என்பனவற்றின் முன்னாள் அதிபருமாவார்.*

## *நாட்டுப்புற நிகழ்கலைப் படைப்பாளி கே.ஏ.குணசேகரன் காலமானார்*

*புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைத்துறைத் தலைவர் முனைவர் கே.ஏ.குணசேகரன் ஜனவரி 17 அன்று தமது 60ஆவது வயதில் உடல் நலக்குறைவு காரணமாக புதுச்சேரியில் காலமானார். அவர் இளம் வயதிலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைகளைக் கண்டு அவர்களின் விடுதலைக்குப் பாடுபட உறுதியேற்றவர். 1980களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மேடைகளில் கிராமிய இசைப்பாடல்களை முற்போக்குப் பாடல்களாகப் பாடியவர்.*

*கல்வியிலும் ஆழ்ந்த புலமை பெற்ற அவர் முனைவர் பட்டம் பெற்று தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் நாடகத்துறைப் பேராசிரியராகவும், உலகத் தமிழிராய்ச்சி நிவனத்தில் இயக்குனராகவும் பதவி வகித்தவராவார்.*

# இலங்கை திசைமாறிச் செல்கிறதா?

**வ**ட கொரியா அண்மையில் நீண்ட தூர ஏவுகணை ஒன்றைப் பரீட்சித்திருக்கிறது. அதன் நடவடிக்கையை பெரும்பாலான மேற்கு நாடுகள் வழமைபோல கடுமையாகக் கண்டனம் செய்திருக்கின்றன. ஐ.நாவும் கண்டனம் செய்திருக்கிறது. வட கொரியாவின் மிக நெருங்கிய நட்புநாடு எனக் கூறப்படும் சீனாவும் இந்த ஏவுகணைப் பரிசோதனையை கண்டனம் செய்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னரும் வட கொரியாவின் அணுஆயுத சோதனை முயற்சிகளை மேற்கு நாடுகள் வன்மையாகக் கண்டித்து வந்ததுடன், அந்நாட்டுக்கு எதிராக பல பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. இருந்தும் வட கொரியா தொடர்ந்தும் அணுஆயுதச் சோதனைகளையும், நீண்ட தூரம் செல்லும் ஏவுகணைகளையும் பரிசோதனை செய்து வருகின்றது.

அத்துடன் அந்நாடு தன்னுடைய நடவடிக்கைகளை தொடர்ந்தும் நியாயப்படுத்தியும் வருகிறது. கொரியாவின் இன்னொரு பாதி நாடான தென் கொரியாவில் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்கள் நிலைகொண்டுள்ளதாலும், அந்நாட்டுக்கு அமெரிக்கா நவீனரக ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கி வருவதாலும், மற்றொரு பக்கத்தில் அருகிலிருக்கும் யப்பானுடனும் இது மாதிரியான கூட்டுறவை அமெரிக்க கொண்டுள்ளதாலும், தனது தேசிய பாதுகாப்புக்காக இத்தகைய நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாக வட கொரியா தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கிறது.

இந்தமுறை வட கொரியாவைக் கண்டனம் செய்திருப்பதில் இலங்கையும் இணைந்திருப்பதுதான் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவிவகார மட்டங்களில் ஆச்சரியகரமான பேசுபொருளாக இருக்கின்றது. வழமையாக இலங்கை இந்த மாதிரியான விடயங்களில் கருத்துச் சொல்வதைத் தவிர்த்தே வந்திருக்கிறது. அதற்குக் காரணம் 1961இல் கூட்டுச்சேரா இயக்கத்தை உருவாக்கியதில் அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவும் முக்கிய பங்கு வகித்திருந்தார் என்பதுடன், அந்த இயக்கத்தில் இலங்கை காத்திரமான பங்களிப்பையும் செய்து வந்திருக்கிறது.

இதற்கு முன்னரும் 2015 ஜனவரி 08இல் மைத்திரி – ரணில் அரசு பதவிக்கு வந்ததின் பின்னர், முன்னைய மகிந்த ராஜபக்ச அரசு லிபியாவின் கடாபி அரசுடன் நட்புப் பாராட்டியதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டனம் செய்திருந்தார். அதைப் பார்த்து பலர் அதிர்ச்சி அடைந்தனர். ஏனெனில் கடாபி பதவியில் இருந்த சுமார் 40 வருடங்களும் இலங்கை அரசு லிபியாவுடன் நெருங்கிய நட்புறவைப் பேணியே வந்திருக்கிறது. 1975இல் இலங்கைத் தலைநகர் கொழும்பில் கூட்டுச்சேரா இயக்கத்தின் உச்சி மாநாடு நடைபெற்றபோது, அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, கடாபி தலைமையில் அதில் கலந்து கொண்ட மிகப்பெரிய லிபிய தூதுக்குழுவினருக்கு சிறப்பு வரவேற்பு அளித்துக் கௌரவித்திருந்தார்.

பண்டாரநாயக்கவால் தோற்றுவிக்கப்பட்டு, அவருக்குப் பின்னர் அவர் மனைவி சிறீமாவோவால் வழிநடாத்தப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் நீண்டகாலம் உறுப்பினராக இருந்து, இப்பொழுது அக்கட்சியின் தலைமைப் பதவியை வகிக்கும் மைத்திரிபால சிறிசேன, மகிந்த அரசு கடாபியுடன் நட்புறவு கொண்டதற்காக கண்டனம் செய்தது பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தப் போக்குகளிலிருந்து தற்போதைய மைத்திரி – ரணில் அரசு இதுவரை காலமும் இலங்கை பின்பற்றி வந்த கூட்டுச்சேராக் கொள்கையிலிருந்து விலகிச் செல்கிறதோ என்ற ஐயம் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

**–இரத்தினம்**

# இதுவும் நல்லாட்சிதானா?

**கொ**ழும்புக்கு அருகில் மாலப்பே என்ற இடத்தில் அமைந்துள்ள தனியார் மருத்துவக் கல்லூரியான SAITM எனப்படும் தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனமும், அதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன வழங்கிவரும் ஆதரவும், இலங்கை கல்வித்துறை வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. இந்நிறுவனத்தின் தோற்றமும் செயற்பாடும் இலங்கையில் நடைமுறையில் உள்ள ஏழைப் பிள்ளைகளின் வரப்பிரசாதமான இலவசக் கல்வியை ஒழித்துக்கட்டுவதின் ஒரு முன்னோடி நடவடிக்கை எனப் பலராலும் பார்க்கப்படுகிறது.

அத்துடன் சுகாதார அமைச்சர் இந்நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கு முயற்சிப்பதற்குக் காரணம், அவரது மருமகள் இந்நிறுவனத்தில் கல்வி கற்று வருவதுதான் எனவும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் லகிறு வீரசேகர குற்றச்சாட்டொன்றையும் முன்வைத்திருந்தார். ('வானவில்' 2016 தை மாத இதழைப் பார்க்கவும்)

இப்பொழுது அந்தத் தனியார் மருத்துவக் கல்லூரியின் தலைவரான டொக்டர் நெவில் பெர்னான்டோ மேலும் சில உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்: "அமைச்சர் ராஜித சேனரத்னவின் மருமகள் மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தில் உள்ள ஏனைய அமைச்சர்களின் மகள்கள் மருமகள்களும் கூட இந்த SAITM நிறுவனத்தில் கல்வி கற்கின்றனர்". (Daily Mirror – 04/02/2016)

தற்போதைய மைத்திரி – ரணில் அரசு நாட்டு மக்களுக்கு நல்லாட்சியைக் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டு, முன்னைய ஆட்சியாளர்களைப் பழிவாங்கும் நோக்குடன் வகைதொகையில்லாமல் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகையில், இலவசக் கல்வியை ஒழித்துக்கட்டும் முகமாக தனியார் மருத்துவக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் செயற்பட்டு வருவது மக்கள் விரோதம் இல்லையா? தேசத்துரோகம் இல்லையா? என்ற கேள்விதான் எழுகிறது.